பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 11 திங்கட்கிழமை 24.01.2022 கதிர் 80

**இனிது ரகசியம் அல்ல!**

பழைய விடயங்கள் இரண்டுடன் இன்றைய பத்தியை ஆரம்பிக்கிறேன். இரண்டும் வடக்கு முன்னாள் ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் சம்பந்தப்பட்டது.

தாம் பதவியேற்ற சமயம், இந்த வடக்கு ஆளுநர் பதவிக்கு வருகின்ற எவரும் 2

# தமிழரின் அரசியல் கட்சிகள் ஒன்றாக இந்தியாவை நாடியமையை சாதாரண விடயமாகக் கருத முடியாது

## அரசுக்கு சு.க. எச்சரிக்கை; தீர்வை வழங்குமாறும் வலியுறுத்து



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரியும், 1987ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக இந்தியாவை நாடியமையை சாதாரண விடயமாகக் கருத முடியாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

ஆகவே, தமிழர் தரப்பின் பிரச்சினைகளைச் செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் 2

## ராஜபக்ஷக்களிடம் நீதி கிட்டவே கிட்டாது

# சர்வதேசத் தலையீடுதான் இனித் தீர்வுக்கு ஒரே வழி!



## காட்டத்துடன் சம்பந்தன் தெரிவிப்பு

ராஜபக்ஷக்களிடத்தில் இனியும் நீதி, நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. எனவே உடனடியாக சர்வதேசத்தின் தலையீட்டைக் கோரும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதுதான் ஒரே வழி எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 10

## புதிய லங்கா சுதந்திரக் கட்சியில் அர்ஜூன,சுசிலுக்கு பிரதான பதவி

குமார வெல்கம தலைமையில் புதிதாக பதிவு செய்யப்பட்ட புதிய லங்கா சுதந்திரக் கட்சியில் (நவலங்கா நிதாஸ் பக்சய) முக்கிய பதவிகளில் அர்ஜூன ரணதுங்க மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோரை நியமிப்பதற்கு பரிந்துரைகள் 10

## கூட்டணியை அபகரிக்க சதி என்கின்றார் சங்கரி



தமிழர் விடுதலைக் கூட்டணியை அபகரிக்க ஒரு குழுவினர் தந்திரமாக செயற்பட்டு வருகின்றனர் எனவும் அவர்களைக் கட்சியின் ஆதரவாளர்களும் மக்களும் நம்பவேண்டாம் எனவும் தெரிவித்து 2

## முக்கிய வழக்கின் நீதியரசர்களுக்கும் கொரானா பாதிப்பு

கெரவலபிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் அரசுக்கு சொந்தமான பங்குகளில் 40 வீதமானவற்றை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணை செய்யும் நீதியரசர்கள் குழாம் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக அறிய முடிகிறது.

இந்நிலையில், 10

## அரசியல் தீர்வு அவசரமல்ல; பஸிலின் கண்டுபிடிப்பு இது!



அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்துவைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின்றோம் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ 2

## வவுனியாவில் பிள்ளையார் மாயம்

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை மாயமாகியுள்ளது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள இலுப்பை மரத்தின் கீழ் சிறிய கூடாரம் அமைக்கப்பட்டு பிள்ளையார் சிலை வைத்து நீண்ட 10

# 34 ஆண்டுகளுக்கு முன் நிராகரித்த 13 ஆவது திருத்தத்தை இனப்படுகொலையின் பின்னர் கோருவது என்ன நியாயம்?

## சீற்றத்துடன் கேட்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.



(வவுனியாச் செய்தியாளர் கி.வசந்தரூபன்)

34 வருடங்களுக்கு முன்னர் நிராகரித்த 13 ஆவது திருத்தச்சட்டத்தை இனப்படுகொலை நடந்த பின் கோருவது எந்த வகையில் நியாயம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியாயில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கேட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

13 ஆவது திருத்தம் என்பது 1987ஆம் ஆண்டே அடியோடு நிராகரிக்கப்பட்ட ஓர் ஆவணம். 13 ஆவது திருத்தமும் மாகாண சபைச் சட்டமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட போது இன்றைக்குக் கூட்டமைப்பின் தலைவர் எனச் சொல்லிக் கொண்டிருக்கும் சம்பந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் ஆகிய மூன்று பேரும் இணைந்து இந்த 13 ஆவது திருத்த வரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றாது தடுத்து நிறுத்துங்கள் என 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனச் சந்தோஷத்துடன் பதவியை விட்டுப் போகும் நிலைமை இருக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர், தமக்கு அப்படி நேரக் கூடாது என்று பிரார்த்தித்திருப்பார். ஆனால், பாவம், அது அப்படித்தான் நேர்ந்தது. தமக்குப் பதிலாக புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்ற ஊடகச் செய்திகளை அறிந்து கொண்டுதான் அவர் தமது மூடை, முடிச்சுகளைக் கட்டவேண்டிதாயிற்று. அந்த நிலைமை தொடர் கதையாகப் போகின்றது என்பதுதான் இப்போது களச்சூழல். அது முதல் விடயம்.

இதோ ஆளுநர் சாள்ஸ் மாற்றப்படப் போகின்றார் என்பதை குறுகிய காலத்தில் என் பத்தியில் நான் பலதடவைகள் அடுத்தடுத்துச் சுட்டிக்காட்ட, அது எதிர்பார்த்த படியே நடந்தேறியது.

அது இரண்டாவது விடயம்.

இப்போதைய ஆளுநருக்கும் அது தான் நிலைமை. சாள்ஸ் அம்மையார் ஆளுநராக இருந்த சமயம், அவரின் செயற்பாட்டில் அரசுத் தலைமைக்கு திருப்தியில்லை என்ற கட்டத்தில், இரண்டாம், மூன்றாம் தரப்புகள் ஊடாகவே அவர் பதவியிலிருந்து தூக்கப்படும் கதைகள் அரசல் புரசலாக கசிந்தன.

ஆனால், இப்போதைய ஆளுநர் விடயத்தில் நிலைமை அதுவல்ல. ஜனாதிபதி மட்டத்திலேயே அதிருப்தி பெருமளவில் இருப்பதை மிக நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறிய முடிந்தது.

வடக்கு ஆளுநரின் கீழ் பணியாற்றும் அமைச்சுக்களின் செயலாளர் மட்டத்திலான உயரதிகாரிகளின் கூட்டு முறைப்பாட்டுக் கடிதத்தில் இருந்து, அவர் அரச நிர்வாகத்தைக் கையாளும் முறைமை வரை சகல விடயங்களும் ஜனாதிபதிக்கே அத்துப்படி என்ற நிலைமை.

இவ்விடயத்தை ஒட்டி, இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தமிழ்ப் பிரமுகர் ஒருவருடனேயே ஒரு சில நிமிடங்கள் ஜனாதிபதி தொலைபேசியில் கலந்தாலோசனை செய்தார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

அந்தப் பேச்சின் சாரம், புதியவர் ஒருவரை ஜனாதிபதி தேடுகின்றார் என்பதுதான் என அந்தப் பிரமுகர் பின்னர் குறிப்பிட்டார்.

அந்தப் பிரமுகரும் சேர்ந்து போட்டுக் கொடுத்திருப்பார் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

ஒரே சமயத்தில் தனக்குக் கீழ் பணிபுரியும் எல்லா அதிகாரிகளுடனும் யுத்த முனையைத் திறந்த ஆளுநரின் போக்கு, இவர் அரச அதிகாரிகளைக் கையாள இலாயக்கற்றவர் அல்லது திறமையற்றவர் அல்லது குழப்பவாதி என்ற எண்ணத்தை அரசுத் தலைவருக்குத் தந்திருக்கக் கூடும்.

ஜனாதிபதியில் இருந்து ஆளுநர் வரை சகலருமே Hire and fire பாணியில் செயற்பட முனைந்தால் இப்படித்தானாகும் போல...!

தன் பதவியைத் தக்க வைத்து உறுதிப்படுத்த, ஆளுநர் சுதாகரித்துக் கொண்டு கனகாத்திரமாக முயற்சி எடுக்காவிட்டால் கதிரையில் அவர் நீடிப்பது துர்லபம்தான்.

தாம் ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் ஒரு Courtesyக்குக் கூட(மரியாதை நிமித்தம் கூட) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேன்றோரைத் தேடிச் சென்று சந்திக்காதவர் இப்போதைய வடக்கு ஆளுநர். அவருக்காக பிரதமர் அலுவலகம் கூட பரிந்துரை செய்யுமோ என்னவோ...! இந்தப் பதவியில் நீண்டகாலம் அவர் தாக்குப் பிடிப்பது என்பது கஷ்டம் தான்.

நாட்டின் மிக முக்கிய அமைச்சான விவசாய அமைச்சுக்கு இரண்டரை வருடங்களில் நான்கு செயலாளர்களை மாற்றிய இந்த ஜனாதிபதிக்கு, வடக்கு ஆளுநரை அடிக்கடி மாற்றுவது அப்படி ஒன்றும் பெரிய விவகாரமாக இருக்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

★ ★ ★

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' – என்ற சிலேடைப் பேச்சுடன் ஒரு விடயத்தைத் தொட்டு விட்டிருந்தேன் நேற்று. அதைப் பார்ப்போம் இன்று.

புதுடில்லியின் தலைவர்கள், உயரதிகாரிகள், இராஜதந்திரிகள் இலங்கை வரும் சமயங்களில் – 1980களின் நடுப்பகுதியில் இருந்தே – ஒரு பண்பியல்பைப் பின்பற்றி வருகின்றனர்.

தமிழர் தரப்புகள் என்ற முறையில் இங்குள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகளுடன் அவர்கள் ஊடாடினாலும், 1987 ஐ ஒட்டிய காலத்தில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள் ஆகிய இரு தரப்புகளுடனும், பின்னர் இப்போது வரை கூட்டமைப்புடனுமே புதுடில்லி பிரதான ஊடாட்டத்தைப் பேணி வருகின்றது. புதுடில்லிக்கு அழைத்து தமிழர் தரப்பு எனப் பேசுவது கூட கூட்டமைப்புடன்தான்.

அனைத்துத் தமிழர் தரப்பையும் ஒன்றாக வைத்துப் பேசும் காலம் 1985 இல் திம்புவுடன் மலையேறி விட்டது என்றுதான் நினைத்தோம். ஆனால் அப்படியில்லை.

இப்போது தமிழர் தரப்புகள் ஒன்றுபட்டு புதுடில்லிக்கு கோரிக்கை மனுக் கொடுத்துள்ள நிலையில் –

சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம், சித்தார்த்தன் போன்றோரே மற்றைய தமிழர் தரப்புகளையும் சேர்த்து, அங்கீகரித்து, ஒரே நிலைப்பாடு எடுத்துப் பொதுக்கோரிக்கையை வைத்திருப்பதால் –

இனிமேல் இந்தக் கட்சிகளை எல்லாம் கூட்டமைப்புடன் சேர்த்து ஒன்றாகக் கையாள வேண்டும் என்ற எண்ணப்பாங்கு புதுடில்லியில் சில தரப்புகள் இடையே ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இதன் மூலம், தீவிரத் தமிழர் தேசிய நிலைப்பாட்டில் இருக்கும் 'கஜேந்திரகுமார் கொம்பனி'யை மட்டும் தனிமைப்படுத்தி ஒதுக்க முடியும் என்ற ஆலோசனையும் புதுடில்லிக்கு சொல்லப்பட்டிருக்கின்றதாம்.

போகின்ற போக்கில், பிரதமர் மோடியைத் தமிழ்க் கூட்டமைப்பினர் இனிமேல் சந்திக்கப்போகும் போது சம்பந்தன், மாவை, சித்தர், செல்வம், சுமந்திரனுடன், விக்னேஸ்வரன், சுரேஷ், ஸ்ரீகாந்தாவையும் சேர்த்துக் கூட்டிச் செல்ல வேண்டி வந்தாலும் வரலாம்.

அப்படியான கதைகள் கட்டவிழ்கின்றன. விரித்துப் பேசுவதும், எழுதுவதும் வினையை வேண்டித் தரலாம் என்பதால் இத்துடன் சுருக்கிக் கொள்கிறேன். பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாக விடயங்களை அலசுவோம்.

செல்வம் – சித்தர் – சுரேந்திரன் குழுவின் புண்ணியத்தில், மற்றைய மூன்று தலைவர்களுக்கும் (சுரேஷ், விக்கி, ஸ்ரீகாந்தா) கூட புதுடில்லி மட்டத்தில் முக்கியத்துவம் கிடைத்திருக்கின்றது என்று சந்தோஷப்படலாம்.

கூட்டமைப்புக்கு வலுச் சேர்க்கும்(?) செல்வம் – சித்தர் – சுரேந்திரன் அணியின் செயற்பாடே ஒரு தனிப் 'பாணி'தான்...! அவர்களால் கூட்டமைப்புக்குப் பெருமை! சிறப்பு!!

– மின்னல் –

---

## 34 ஆண்டுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் காந்திக்குக் கடிதம் எழுதினார்கள். அதை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கூடக் கருத முடியாது என்பதால் அப்போதே அதை நிறுத்தக் கோரினார்கள். அதனை ஆரம்ப புள்ளியாகக் கருதலாம் என்றால் தடுத்து நிறுத்த முயன்று இருக்கத் தேவையில்லையே.

34 வருடங்களுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்டதை இன்று மீண்டும் கொண்டு வர முயல்கிறார்கள். அன்று ஏற்பட்டிருந்த இழப்புகளுடன் ஒப்பிடுகையில் அப்போது இழப்பு குறைவாக இருந்தது. இன்று இனவழிப்பு நடந்த பின் அதனை நடைமுறைப்படுத்தக் கோருவதில் என்ன நியாயம் இருக்கின்றது? போர் முடிந்த கையுடன் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை வந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து 2009 மே மாதம் 21 ஆம் திகதி 13 ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அதனையே இன்று நிறைவேற்ற முயலுகிறார்கள். இது நடக்கும் என்று தெரிந்தமையால் நாம் கூட்டமைப்பில் இருந்து விலகி மக்களுக்கு இதனைத் தெரியப்படுத்தி வந்தோம். 11 வருடங்களாகச் சுட்டிக் காட்டி வந்த விடயம் இன்று நடந்து கொண்டு இருக்கிறது. அதனால்தான் நாம் இதனை எதிர்க்கிறோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி 11 வருடமாகச் சொல்லி வந்த அடிப்படையே 13 ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டது என்பதுவே. அதனால் இதனை எப்படி நாம் தமிழர் நலன்சார்ந்து எதிர்க்காமல் இருக்க முடியும்?

ஒற்றையாட்சியின் சின்னமாக இருக்கக் கூடிய சிங்கக் கொடி, ஒற்றையாட்சியின் சின்னமாக இருக்கக் கூடிய சிறிலங்காவின் சுதந்திர தினம் எல்லாவற்றையும் புறக்கணித்து வந்த தமிழ் தேசிய அரசியலை இப்போது மாற்றியமைக்க முயல்கிறார்கள். ஒற்றையாட்சிக்குள் மக்களை முடக்குவதற்கு அவர்களைத் தயார்படுத்தும் வேலைகள் நடைபெறுகின்றன. இதனை நாம் எதிர்க்காது விடின் எதனை எதிர்க்க முடியும்? எமது இருப்பே இதற்கு எதிரானதுதான். யார் எதைச் சொன்னாலும் தமிழ் மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும். அப்போது தான் இவை தோற்கடிக்கப்படும். – எனத் தெரிவித்தார். (உ–100)

---

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்கு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் முரண்பாடுகள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் தமிழர் தரப்பு இந்தியாவுடன் தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் 1987ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தியுள்ளமை வழமை போன்ற செயற்பாடாக இருந்தாலும் இப்போது இதனைச் சாதாரணமாகக் கருத முடியாது.

இன்று சீனா, ஜப்பான் ஒருபக்கம் பலமடைந்து வருகின்ற நிலையில் அமெரிக்க தலைமையில் இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் கூட்டணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போட்டியில் இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது. இதில் தமிழர் தரப்பின் நகர்வுகள் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வெவ்வேறு நாடுகளுடன் நாம் பகுதி பகுதியாக இணைய நினைப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல.

நாடாக ஒரே கொள்கையில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்காக முதலில் தேசிய மட்டத்தில் சகல தரப்பையும் ஒன்றிணைத்துப் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும்.

தமிழர் தரப்பின் பிரச்சினைகளைச் செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இனியும் தவறான கொள்கையில் அரசு பயணித்தால் ஒட்டுமொத்த நாடுமே பாதாளத்தில் விழும் – என்றார்.

---

## கூட்டணியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக்குழு, மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள் என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பாரம்பரியமிக்க கட்சி. இதனை பொய்களை வாரி வழங்கும் ஒரு குழுவினர் தந்திரமாக அபகரிக்கத் திட்டமிட்டு, என்மேல் அவதூறு சொல்லி, என்னை அவமானப்படுத்தி, கட்சி ஆவணங்களையும், அலுவலகத்தையும் அபகரிக்கத் திட்டமிட்டு தோடல்லாமல், 24.01.2022 அன்று நடவடிக்கைக் குழுவைக் கூட்ட இருப்பதாகவும், 29.01.2022 அன்று நடைபெற விருக்கும் கூட்டத்தில் நியமனங்களை வழங்க இருப்பதாகவும் அறிகிறேன்.

இதில் கலந்துகொள்வது சட்டவிரோதமான செயலாகும். ஆதலால் தயவு செய்து சட்டவிரோதமான இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாதீர்கள்.

இந்த மோசடிக்கார்களுக்கெதிராக எனது சட்டத்தரணி மூலம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும், இந்த மோசடிக்காரர்களை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் தெரிவிக்கின்றமையோடு அவர்களுடன் எவ்வித தொடர்பும் வைக்க வேண்டாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனைத்து ஆதரவாளர்களையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். – என்று உள்ளது.

---

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

"திறந்த மனதுடன் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. அந்தப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படும். அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினை அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளே முக்கியம்.

எனவே, முதலில் அத்தியாவசிய தேவைகளுக்கு – அடிப்படைப் பிரச்சினைகளுக்கு – தீர்வு காண வேண்டும். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திட்டமாக உள்ளது. இவற்றுக்கு முதலில் தீர்வு கண்டால் அரசியல் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காணமுடியும்.

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்தி, இனவாத ரீதியில் செயற்பட அவர்கள் முற்படக்கூடாது. நாட்டை முன்நகர்த்தும் செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க



# தங்கத்தின் விலை திடீர் மாற்றத்தில்!

கொழும்பு, ஜனவரி 24

இலங்கையில் தங்கத்தின் விலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை சந்தையில் 22 கரட் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 200 ரூபாவுக்கும், 24 கரட் தங்கம் ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை அமெரிக்க டொலரின் மதிப்பை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் பல நாடுகளில் கொவிட் தொற்று பரவல் ஆரம்பித்ததைத் தொடர்ந்து தங்கத்தின் விலையிலும் தொடர்ச்சியாக அதிகரிப்பு பதிவாகி வருகின்றது.

இதற்கமைய, தங்கத்தின் விலை அடுத்த 12 – 15 மாதங்களில் உச்சம் தொடலாம் என நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இது தொடர்பாக மோதிலால் ஆஸ்வால் நிறுவனத்தின் கணிப்பு படி அடுத்த 12 – 15 மாதங்களில் அவுன்ஸுக்கு 2000 டொலர்களுக்கு மேலாக அதிகரிக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதுடன், வரலாற்று உச்சத்தை எட்டலாம் எனவும் கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்

உதிர்வு
14 . 08 . 1930



மறைவு
21 . 01 . 2022

**யாழ் மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும், முன்னை நாள் மல்லிகா ஸ்ரோர்ஸ் (Mallika Stores, Chunnakham) உரிமையாளருமான,**

## இளையதம்பி தம்பு

யாழ் மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும், முன்னை நாள்மல்லிகா ஸ்ரோர்ஸ் (Mallika Stores, Chunnakham) உரிமையாளருமான, இளையதம்பி தம்பு அவர்கள் 21.01.2022 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில்இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அளவெட்டி இளையதம்பி, சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி, செல்லம் மாதம்பதிகளின் மருமகனும், தவராசமணியின் ஆருயிர்க் கணவரும், நவரட்ணராஜா (சுவிஸ்), புஷ்பராணி, சுகுமார் (முன்னாள் PRM Bindary உரிமையாளர்), புஷ்பலதா, சிவகுமார், புஷ்பகலா (காவேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சந்திரவதனி (சுவிஸ்), காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (Netherlands), செல்வானந்தி (Niruthya Kalashesthira Dance Academy), ஜெயதீஸ்வரன், பகீரதி, அருள்பரன் (Sun Express Transport Inc.) ஆகியோரின் அன்புமிக்கமாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னத்தங்கம், சேனாதிராசா, செல்லத்துரை(விக்னேஸ்வரி ஸ்ரோர்ஸ்), விசாலாட்சி, சின்னத்துரை (பத்தாயிரம்) PRM Company முன்னாள் உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகுசகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), அண்ணாமலை (Prakash Transport Service - Colombo), நல்லதங்கம், விக்னேஸ்வரி, சதாசிவம் (சகுந்தலாMetal Works), இலட்சுமி (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற சிவலிங்கம், சிவமணி (இலங்கை), காலஞ்சென்ற அற்புதம், சிவராசா (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், அசோக் – கோபிதா, அச்சுதன் – ரண்யா, டினோா – பிரேம், வினுஜன், றிாந்த் (Precision Roadside Assistance) தாரிணி, நிஷாந்த், றொஜான், றஜீத், சகானா – ஜோயல், றபிஸா – மிதுகே், றிாணி, அக்ஷவி, றாகாஸ், அகீன், அகிலாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், தக்ஷிகா, கனிஷ்கா, றிஸ்டன் விஷ்ணு, ஐஸ்வர்யா இளையா ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பார்வைக்கு:- திகதி: செவ்வாய் கிழமை January 25, 2022 பிப 6 மணி முதல் 9 மணி வரை முகவரி: Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1. Canada

கிரியை: திகதி: புதன் கிழமை January 26, 2022 பிப 12 மணி முதல் 3 மணி வரை.

முகவரி: Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1. Canada.

தகனம்: திகதி: புதன் கிழமை January 26, 2022 பிப 4 மணி

முகவரி: Forest Lawn Crematorium, 4570 Yonge Street, Toronto, ON M2N5L6. Canada.

**தொடர்புகளுக்கு:-**

| | |
|---|---|
| **நவரட்ணராஜா (மகன்) -** | **+1 (647) 615 - 8255** |
| **புஸ்பராணி (மகள்) -** | **+1 (905) 294 - 0567** |
| **சுகுமார்(மகன்) -** | **+1 (416) 875 - 0903** |
| **புஸ்பா (மகள்) -** | **+1 (416) 400 - 7176** |
| **சிவகுமார் (மகன்) -** | **+1 (416) 824 - 7482** |
| **காவேரி (மகள்) -** | **+1 (647) 836 - 3353** |


# டயானா கமகேக்கு புத்திக்குறைபாடு மைத்திரிபால பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 24

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ள டயானா கமகேவிற்கு ஏதேனும் புத்திக்குறைபாடு இருக்கக் கூடும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொவிட் வைரஸ் தொற்றுப்பரவல் காரணமாக நாட்டு மக்களுக்கு சேவையாற்ற முடியாமல் போன இரு வருட காலத்தை மீண்டும் பெற்றுக்கொடுக்கும் வகையில், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதியின் பதவிக்காலத்தையும் நாடாளுமன்றத்தின், பதவிக்காலத்தையும் மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமனே சபையில் யோசனையொன்றை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே மைத்திரிபால இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

டயானா கமகேவிற்கு ஏதேனும் புத்திக்குறைபாடு இருக்கக்கூடும் என்றே தோன்றுகின்றது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் இருவருடங்களால் நீடிக்கவேண்டும் என்று டயானா கமகே கூறினாலும், இந்த விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்னவென்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? அவர் இதற்கு உடன்பட வேண்டும் அல்லவா? ஜனாதிபதி இவ்வாறானதொரு நிலைப்பாட்டில் இருக்கிறார் என நான் கருதவில்லை.

எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் இதற்கு முன்னரொருபோதும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடித்ததால் ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கு என்ன நேர்ந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது எனது பதவிக்காலத்தைக் குறைத்துக் கொண்டேன்.

அந்தவகையில் வேறு எந்தவொரு ஜனாதிபதியும் தமது பதவிக்காலத்தை மீண்டும் அதிகரித்துக்கொள்வதற்கு முற்படுவார்கள் என்று நான் கருதவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் குறித்து பல பிரச்சினைகள்

## விசாரணை நடத்தப்படும் என்கிறார் பரீட்சை ஆணையாளர் நாயகம்

நாடளாவிய ரீதியில் 2021 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை சனிக்கிழமை நடைபெற்றது.

புலமை பரிசில் பரீட்சை தொடர்பாகப் பல்வேறு பிரச்சினைகள் பதிவாகியுள்ளன எனவும், இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தர்மசேன தெரிவித்துள்ளார்.

சில பரீட்சை மத்திய நிலையங்களில் நீண்ட நேரத்திற்கு பின்னர் பரீட்சை வினா தாள்கள் வழங்கப்பட்ட போதிலும், விடை எழுதுவதற்கான நேரத்தை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன்,சில பரீட்சை நிலையங்களில் சுவர் கடிகாரம் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும்,விடை எழுதுவதற்குத் தாள்கள் வழங்கப்படவில்லை எனவும், மேற்பார்வையாளர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டனர் எனவும் பல் வேறு குற்றச்சாட்டுக்களை மாணவர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில்,மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் 2 லட்சத்து 55 ஆயிரத்து 62 மாணவ, மாணவியரும், தமிழ்மொழி மூலம் 85 ஆயிரத்து 446 மாணவ மாணவர்களும், பரீட்சைக்காகத் தோற்றியுள்ளதுடன், 2 ஆயிரத்து 943 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும்,எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எதிர்ப்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நம்பிக்கை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சித்திரை வருடப்பிறப்புக்கு முன் புலமைப்பரிசில் பெறுபேறு வரும்!

கொவிட் தொற்றுநோய் காரணமாக பல சந்தர்ப்பங்களில் பிற்போடப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கொவிட் தொற்றுக்குள்ளான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் விசேட முறைமையின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதம் வழமை போன்று நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கொவிட் தொற்றுநோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி, 2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை சுமார் 5 மாத கால தாமதத்தின் பின்னர் சனிக்கிழமை நடைபெற்றது.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பரீட்சை நடைபெற்றது.

இந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2 லட்சத்து 55 லட்சம் 62 சிங்கள மொழி மூல பரீட்சார்த்திகளும் 85 ஆயிரத்து 446 தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகள் உட்பட மொத்தம் 3 லட்சத்து 40 ஆயிரத்து 508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இது 2 ஆயிரத்து 943 பரீட்சை மத்திய நிலையங்களிலும், 108 விசேட மத்திய நிலையங்களிலும் இடம்பெற்றது.

இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை மிக விரைவில் வெளியிட எதிர்ப்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன குறிப்பிட்டார்.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எதிர்ப்பார்த்துள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தேர்தல் முற்கூட்டி வராது

எப்போதோ நடக்கப் போகும் திருவிழாவுக்கு இப்போதே ஆயத்தம் செய்யும் தடபுடல் மாதிரி சில செய்திகளும் முற்கூட்டியே கசிய விடப்படுகின்றன.

அவற்றில் ஒன்றுதான் – அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தப்படும் – என்ற கயிறு.

அரசமைப்பின் 20ஆம் திருத்தத்தின்படி ஒரு நாடாளுமன்றம் பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு இரண்டரை ஆண்டுகள் வரை ஜனாதிபதி அதனை முற்கூட்டியே கலைக்க முடியாது. இரண்டரை ஆண்டுகளின் முடிவின் பின்னர், அந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர், எந்தச் சந்தர்ப்பத்திலும் – தம்மிஷ்டப்படி – நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம்.

தற்போதைய நாடாளுமன்றம் 2020 ஒகஸ்டில் நடத்த பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன்படி 2023 பெப்பெவரி 5ஆம் திகதி வரை அதனை ஜனாதிபதி கலைக்க முடியாது. அதன் பின்னர் எச்சமயத்திலும் அவர் கலைக்கலாம்.

ஏற்கனவே வரும் மார்ச் மாதத்தில் காலாவதியாக வேண்டிய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் 2023 மார்ச் வரை ஒரு வருடத்துக்கு அரசினால் நீடிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச்சில் அவற்றின் நீடிக்கப்பட்ட பதவிக் காலம் முடிவடையும் போது உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டியிருக்கும். அதை அதற்கு மேலும் தள்ளிப் போட சட்டத்தில் இடமில்லை.

ஆக, அடுத்த ஆண்டு மார்ச்சுக்குப் பின்னர் எந்த சமயத்திலும் உள்ளூராட்சித் தேர்தலையும், நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலையும் நடத்த அரசு உத்தேசிக்கின்றது என்ற சாரப்படவே தென்னிலங்கையில் செய்தி இப்போது கசியவிடப்பட்டிருக்கின்றது.

ஆனால், அப்படித் தேர்தல்கள் ஒன்றாக நடத்தப்பட்ட வாய்ப்புகள் இல்லை என்பதுதான் அரசியல் களநிலை வரமாகும்.

ஏற்கனவே, இவை இரண்டுக்கும் முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டி உள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு மேல் அது நிலுவையில் நீடிக்கிறது.

நல்லாட்சி அரசு உரிய சட்ட விதிகளை நீக்கியமையினால் இந்த மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது என்று கூறும் இப்போதைய அரசு, அந்தச் சட்ட விதிகளை குறுகிய ஓரிரு வாரங்களில் கொண்டு வந்து, சட்டமாக நிறைவேற்றி, அத்தேர்தல்களை நடத்த வாய்ப்பும் சந்தர்ப்பமும் இருந்தும் கூட, அதிகாரத்துக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகியும் அதைச் செய்யாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றை அடுத்து, இந்த ஆட்சிப் பீடத்தின் செல்வாக்கு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டது. இப்போது தேர்தல் நடத்தினால் மக்கள் செல்வாக்கு – ஆதரவு – தொடர்பான தனது 'பொட்டுக்கேடு' வெளியே தெரிந்து விடும் என்ற உண்மை ஆட்சிப் பீடத்துக்கு நன்கு தெரியும். அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர்கொள்ள மறுத்து, அதனை ஒரு வருடத்துக்குத் தள்ளிப்போட்டது அரசு.

இருக்கும் நாடாளுமன்றத்தைக் கலைத்தால் தனக்குள்ள மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அடிபட்டுப் போய்விடும் என்ற உண்மை ஆட்சித் தலைவருக்கு நன்கு தெரியும். ஆகவே அவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் விஷப் பரீட்சையில் இறங்கவே மாட்டார். அதற்கு அவருக்கு முகாந்திரம் ஏதும் கிடையாது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2024 நடத்தப்படும் போது தனக்கு வாய்ப்பான நாடளுமன்றம் இருப்பதையே ஜனாதிபதி கோட்டாபய விரும்புவார். ஆகவே முற்கூட்டிய நாடாளுமன்றக் கலைப்பு எதற்கும் அவர் போவார் என்று கருத்துவது சாத்தியப்படக் கூடிய ஒன்றல்ல.

பொதுத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் எதற்கும் தானாக விரும்பித் தேடி இந்த அரசு போகாது என்பதுதான் உண்மை நிலைமை. மக்கள் தீர்ப்பு எதற்கும் முகம் கொடுக்கும் திராணி இப்போது அதற்கு இல்லை என்பதுதான் அதற்கும் காரணம்.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் பெண் கைது

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமாக நாட்டுக்குக் கடத்த முற்பட்ட பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

799 கிராம் நிறையுடைய குறித்த தங்க நகைகளின் பெறுமதி 91 இலட்சத்து ஆயிரத்து 646 ரூபாவாகும்.

கண்டியைச்சேர்ந்த 30 வயதான பெண்ணே சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் டுபாயிலிருந்து நாட்டுக்கு வருகை தந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தங்க நகைகளுக்காக 27 இலட்சத்து 67 ஆயிரத்து 152 ரூபா வரி மற்றும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு சுங்கத் திணைக்களம் குறித்த பெண்ணுக்கு உத்தரவிட்டுள்ளது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த பொறுப்புடன் செயற்படுங்கள்!

## மக்களிடம் சுதர்ஷினி வேண்டுகோள்

பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் கொரோனா பரவல் நிலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

தற்போதைய சுதந்திரமான சூழலைப் பொதுமக்கள் அனுபவிக்கின்ற அதேநேரம், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தற்போது மூன்றாம் தடுப்பூசியாக பைஸர் செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்படுகின்றது. அதனைப் பொதுமக்கள் செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஞானாசாரரை சந்தித்த சூபி உலமாத் தலைவர்



இலங்கை சூபி உலமா சபையின் தலைவர் ஏ.அப்துல் ரவூப் மிஸ்பாஹி பஹ்ஜ் உள்ளிட்ட குழுவினர், 'ஒரு நாடு - ஒரு சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரரை சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பு வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பில், சிங்கள - முஸ்லிம் மற்றும் பௌத்த - முஸ்லிம் மக்கள் மத்தியிலான சகவாழ்வு, சர்வமத சகவாழ்வு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனை இலங்கையில் வாழும் சூபி கலாசாரங்களை கொண்ட முஸ்லிம் சமூகத்துக்கு வஹாபிகள் மூலம் எதிர்நோக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டமையுடன் அவை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை, இலங்கை சூபி உலமா சபையின் தலைவர் ஏ. அப்துல் ரவூப் மற்றும் அவரை பின்பற்றுவோரை இஸ்லாமிய மதத்தில் இருந்து வெளியேறியவர்கள் எனவும் ஷரியா சட்டத்துக்கு அமைய அவர்களைக் கொலைசெய்ய வேண்டும் எனவும் கூறி பஃத்வா என்ற சமய கட்டளையை பிறப்பித்திருந்தனர் எனவும் சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

# வட்டவளையில் வனங்களுக்குத் தீ வைப்பு 190 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு!

வட்டவளை பகுதியில் இருவேறு வனப் பகுதிக்கு இனந்தெரியாதவர்கள் வைத்த தீயின் காரணமாக அப்பகுதியில் உள்ள சுமார் 190 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை இன்சரா பிரிவில் உள்ள சுமார் 200 ஏக்கர் பைனஸ் காட்டுப்பகுதிக்கு சனிக்கிழமை பகல் இனந்தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டதன் காரணமாக அந்த காட்டுப்பகுதியில் சுமார் 6 ஏக்கர் வரை தீயிக்கிரையாகியுள்ளது.

குறித்த வனப்பிரதேசத்துக்குக் கீழ்பகுதியில் அமைந்துள்ள இலக்கம் 101 வீடமைப்புத் திட்டத்துக்கு இந்த வனப்பகுதியிலிருந்தே குடிதண்ணீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

இதனால் அந்தப் பகுதியில் வாழும் 60 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இதே நேரம் வட்டவளை பகுதியில் உள்ள நீர் போசன பிரதேசத்துக்கு தீ வைத்ததன் காரணமாக அப்பகுதியில் சுமார் ஐந்து ஏக்கர் வரை எரிந்து நாசமாகியுள்ளது. வட்டவளை பகுதியில் உள்ள 130 குடும்பங்களுக்கு குறித்த பிரதேசத்திலிருந்தே குடிதண்ணீர் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இதனால் இந்த 130 குடும்பங்களுக்கும் எதிர்காலத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.

மலையகத்தில் தற்போது வரட்சியான காலநிலை காணப்படும் நிலையில் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. கடும் வெயிலும் காற்றும் காணப்படுவதால் தீ மிக வேகமாகப் பரவி வனப்பிரதேசங்களில் பெரும்பகுதி அழிவடைகின்றன.

இதனால் நீரூற்றுக்கள் அற்றுப்போய் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுவதுடன் இந்தப் பிரதேசத்தில் உள்ள அரியவகைத் தாவரங்கள், மருந்து மூலிகைகள், வன விலங்குகள் போன்றன அழிவடையும் நிலையும் காணப்படுகின்றன.

அத்தோடு நீர் இன்மை காரணமாகக் காடுகளில் வாழும் கொடிய வன விலங்குகள் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வரக்கூடிய அபாயமும் காணப்படுகின்றது.

எனவே, காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பழைய அரசியல் கட்சிக்கு உயிரூட்ட நடவடிக்கை!

## பின்னணியில் சந்திரிக்கா



கொழும்பு, ஜன. 24

நாற்காலி சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மீண்டும் உயிரூட்டும் திட்டங்கள் நடந்து வருகின்றன எனத் தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என கூறப்படுகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியை மீண்டும் உயிர்ப்பித்து, அதன் தலைமையில் வேறு கட்சியை இணைத்து கூட்டணியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், ராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்தவும் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இவரைத் தவிர அனுர பிரியதர்ன யாப்பா, சந்திம வீரக்கொடி ஆகியோரும், பொதுஜன ஐக்கிய முன்னணியை மீள மைக்கும் பணியில் இணைந்துள்ளனர். அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவும் இந்த புதிய கூட்டணியில் இணையவுள்ளார்.

இது சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, குமார வெல்கமவுடன் சில சுற்று பேச்சுகளை நடத்தியுள்ளார் எனத் தெரியவருகிறது. இதனிடையே அரசாங்கத்தின் மீது அதிருப்தியில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்தப்படவுள்ளது.

அதேவேளை, கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீள உருவாக்கம் செய்யப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சுயசரிதை நூல் அண்மையில் கொழும்பில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில், கலைஞர்கள், அரசியல்வாதிகள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மீண்டும் செயற்பாட்டு ரீதியான அரசியலுக்குள் வருவதே இந்த நூல் வெளியீட்டு நடவடிக்கையின் பின்னணியில் இருக்கும் நோக்கம் எனவும் பேசப்படுகிறது.

# தவறி கீழே விழுந்து ஒருவர் பரிதாப பலி!

நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாதமலைக்கு செல்லும் வழியில் உள்ள ஜப்பான் நாட்டு பௌத்த பிக்குகளால் கட்டப்பட்ட விகாரையில் உள்ள மகுதிக்கு வர்ணம் பூசும் பணி செய்து கொண்டிருந்த ஒருவர் மகுதியில் இருந்து தவறி கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

எஸ். சுப்பையா என்ற 70 வயதுடைய மஸ்கெலியா மறே தோட்டத்தை சேர்ந்த வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மகுதியில் இருந்து தவறி கீழே விழுந்து படுகாயம் அடைந்த நிலையில் 1990 அம்புலன்ஸ் ஊடாக மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திசாலைக்கு மாற்றப்பட்டு பின் அங்கிருந்து கண்டி தேசிய வைத்திசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழுந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கண்டி தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் நல்லதண்ணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நிரம்பி வழியும் கொவிட் தொற்றாளர்!

கொழும்பு, ஜன. 24

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளின் சகல படுக்கைகளிலும் தற்போது கொவிட் நோயாளிகள் நிரம்பியுள்ளனர் என வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அந்தோனி மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இரண்டு தீவிர சிகிச்சை பிரிவுகளிலும் நோயாளிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தனர்.

தற்போது நாடு முழுவதும் தேசிய வைத்தியசாலையில் நோயாளிகள் சேர்க்கப்படுகின்றமையால் இது அலையாக மாறியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் கொவிட் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால், அவர்களில் சிலர் தீவிர சிகிச்சை பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

மேலும் சிலர் அதி தீவிர சிகிச்சை பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொவிட் நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாகவும், தடுப்பூசியே அதனைக் கட்டுப்படுத்த ஒரே வழி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கான முதலீடுகளை பெற்றுக்கொடுத்த டக்ளஸ்!



யாழ்ப்பாணம், ஜன. 24

பூநகரி, கௌதாரிமுனை பகுதியில் கடலட்டைப்பண்ணை அமைப்பதற்கான ஆர்வத்தை வெளியிட்ட பிரதேசத்தை சேர்ந்த சுமார் 52 தொழில்முனைவோருக்கான ஆரம்ப முதலீடுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் தனியார் முதலீட்டாளர்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு பூநகரி – நாச்சிக்குடா வில் இடம்பெற்றது.

மேலும், குறித்த தனியார் முதலீட்டாளர்களுக்கும் தொழில் முனை வோருக்குமான ஒப்பந்தங்கள் இதன் போது கைச்சாத்திடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தோணிக்கல் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

## பொலிஸார் விசாரணை

வவுனியா – தோணிக்கல் பகுதியில் சமைத்துக் கொண்டிருந்த போது எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தோணிக்கல், திருவள்ளுவர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் சமைத்துக் கொண்டிருந்த போது சனிக்கிழமை திடீரென எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

இதனையடுத்து வீட்டார் எரிவாயு சிலிண்டரைப் பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதைத் தடுத்துள்ளனர். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியலில் முன்னணித் தலைவரின் பணத்தை மோசடிசெய்த செயலாளர்

நாட்டின் முன்னணி அரசியல் தலைவர் ஒருவரின் நாடாளுமன்ற விவகார செயலாளராகக் கடமையாற்றிய ஒருவர், செய்த நிதி மோசடி காரணமாக, அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நபர், குறித்த தலைவரின் பணம் மீளபெறும் அட்டையைப் பயன்படுத்தி, வங்கிக் கணக்கில் இருந்து நீண்டகாலமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமை தெரியவந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இந்த நபரைச் சம்பந்தப்பட்ட முன்னணி அரசியல் தலைவர் 'முட்டாள் பேய்' என ஒரு முறை பகிரங்கமாகத் திட்டியிருந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நாடாளுமன்ற விவகார செயலாளராக கடமையாற்றும் உதித் லொக்கு பண்டாரவை, மஹிந்த ராஜபக்ஷ ஒரு முறை ஊடகங்களுக்கு முன்னால் பகிரங்கமாக திட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

உதித் லொக்குபண்டார, முன்னாள் சபாநாயகர் டப்ளியூ.ஜே.எம். லொக்குபண்டாரவின் புதல்வராவார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளில் கொல்லப்பட்ட ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட விலங்குகள்

அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களில் மோதுண்டும், வாகனங்களால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பு காரணமாகவும் பறவைகள் உட்பட பல்வேறு விலங்குகள் கொல்லப்பட்டுள்ளன என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளதாக சுற்றுச் சூழல் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

கடந்த காலம் முழுவதும் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட உயிரினங்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மயில்கள் கொல்லப்பட்டுள்ளன என சுற்றுச் சூழல் அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

அதிவேக நெடுஞ்சாலைகளில் சில வன விலங்குகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பது ஒப்புக்கொள்வதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

இதனைக் கவனத்தில் கொண்டே பறவைகள் உட்பட விலங்குகள் விரும்பும் மரம், செடி கொடிகளை அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு இரு புறங்களில் இருக்கும் இடங்களில் பயிரிட வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் திறக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் விலங்குகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தற்போது பெருமளவில் குறைந்துள்ளன.

வன விலங்குகளைக் கவரும் மரங்கள், செடி கொடிகள் பயிரிடப்படுவதை தடுக்க அதிவேக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளனர். குறிப்பாக மயில்கள் அதிகளவில் காணப்படும் இடங்களில் வீதிகளில் அறிவிப்பு பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன எனவும் சூரிய பண்டார குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களில் மோதுண்டு கொல்லப்பட்ட விலங்குகளின் உடல்கள் சாலைக்குள் வெளியில் விழுந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன என சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 261

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

சிறிமாவோ பண்டாரநாயக்கா காலத்திலிருந்தே தமிழ் மக்களுக்கு எதுவித மான சலுகைகளும் தரப் படாதிருத்தலில் குறியாயிருந்தனர்.

பின் சந்திரிக்காவின் ஆட்சியில் அவ



தந்தை செல்வா

ரது திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டனர். சுனாமி ஒப்பந்தத்தைக் குழப்பினர். பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரித்து, பின் போருக்கு வழி வகுத்த ராஜ பக்ஷக்களுக்கு, துணை நிற்பவர்களையும், பேரினவாத அமைப்புகளையும் ஆராய்ந்தால் அவர்கள் தங்கள் கருமத்தில் கண்ணாயிருக்கின்றார்களா அல்லது தமிழ் மக்களுக்கு சமஷ்டி தருவதில் அக்கறை கொண்டுள்ளனரா என்பது புரியும். அப்படி இருக்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அரசின் கொள்கை விளக்க உரையில் இனப்பிரச்சினை பற்றி ஏதும் சொல்லுவார் என எங்களது தலைவர்கள் எதிர்பார்த்து, என் இப்படிக் கோபப்பட வேண்டும்?

தமிழ் மக்கள் தாங்கள் கடந்த 13 வருடங்கள் நடத்திய அரசியலையும், எங்கெங்கே ஆதரவுகள் தேடியிருக்க வேண்டும், செயலூக்கமுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பவற்றை மீளாய்வு செய்தல் வேண்டும்.

இங்கு ஜனாதிபதி தரப்பில் நூறு வீதமான பிரதேசத்தையும் வென்று விட்டேன்



மஹிந்த ராஜபக்ஷ

என்ற பெருமிதமோ, மமதையோ இருந்ததே தவிர, தமிழ் மக்களின் மனங்களை வென்று, அவர்களை நாட்டின் பங்காளிகளாக்கும் எண்ணம் இருக்கவில்லை.

அவர்கள் பின்னால் இருக்கும் பேரினவாதம், கோட்டாவை, 'சிங்கள - பௌத்த' மக்களின் ஜனாதிபதியாக்கி, அந்த முன்னேற்றத்திலேயே குறியாகியிருக்கின்றது. அவர்களது திட்டம், நோக்கம் மாறாது, குறியை நோக்கித் தொடர்ந்து முன்னேறுகின்றது (Continuity of purpose) ஆனால் தமிழ் மக்களது அரசியலோ, தொடர்பில்லாதது மாத்திரமன்றி உறுதியற்றதாகவும் இருந்தது (No continuity and disconnected). இதைத் தான் அவர்கள் மோடிக்கு கொடுத்த சமர்ப்பணத்திலும் செய்தார்கள் என அபிப்பிராயம் உள்ளது.

தமிழ் தலைவர்கள் நடத்துகின்ற அரசியலால் இனப்படுகொலை என நிறுவப்படுவதிலும் விவகாரம் கேள்விக் குறியாக்கப்படுகின்றது.

தருஸ்மன் அறிக்கையின் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைகள் மன்று ஆராயும்



சம்பந்தன்

காலம் 2006 - 2009 இல் போர் முடிந்த நாள்கள் வரை. அந்த கால கட்டத்தில், பயங்கரவாதத்தை அழிப்பதற்காகத்தான், போர் நடத்தப்பட்டது என்ற வாதத்தையும் உள்ளடக்கி, அது ஓர் இனப்படுகொலையாக நடத்தப்பட்டதா என்ற முடிவுகளுக்கு சர்வதேசம், சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் மூலம் வரவேண்டும்.

முள்ளிவாய்க்கால் காலங்களில் இனப்படுகொலையை நோக்கமாக இருந்தது என்பதை நிரூபிக்க தமிழ் தரப்புகள், 2006க்கு முன்னரும், 2009க்கு பின்னருமான காலத்தின் இனப்படுகொலையையும் ஐ.நாவின் கட்டமைப்புகள் முன் கொண்டு வருதல் வேண்டும்.

சன்சோனி ஆணையத்தின் முன் சிங்கள பெரும்பான்மை தரப்புகள் எப்படி பண்டி சொய்சாவை முன்னிறுத்தி, பின் தொடர்ச்சியாக நடத்திய செயற்பாடுகளால், ஆணையம் விசாரிப்பதற்காக நிறுவப்பட்ட கால எல்லையான 13 ஆகஸ்ட் 1977 - 15 செப்டெம்பர் 1977 என்பது பின்னர் 1970க்கு முன் நாள்களுக்கும் எடுத்து செல்லப்பட்டதோ, அப்படி தமிழ் அரசியல் தலைமைகளோ, தரப்புகளோ இப்போது இயங்குகின்றார்களா என்பது கேள்விக் குறியே. இனப்படுகொலை என நிறுவப்பட, முதலில் இந்தத் தரப்பின் விஸ்தீரணங்கள் அகலிக்கப்பட வேண்டும்.

**668.தங்களது அரசியல்வாகள், இவற்றை இனப்படுகொலை என முன் நகர்த்துவார்கள் என தமிழர்கள் நம்பலாமா?**

தமிழ் மக்கள் மாத்திரமல்லர், எந்த நாட்டு மக்களும் அரசியல்வாதிகளில் நம்பிக்கை வைப்பது முட்டாள்தனமே. அரசியல்வாதிகள் தேர்தலை நோக்கி இயங்குபவர்கள். வரும் ஒவ்வொரு தேர்தலையும் குறி வைத்து அதற்கு ஏற்ற வகையில், வாக்குறுதிகளை தருவதில் கெட்டிக்காரர்கள். வாக்குறுதிகள் தேர்தலுக்கு மட்



கோட்டா ராஜபக்ஷ

டுமே, அதன் பின்னர் அவற்றை மறந்து விடவேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்லர், சிங்கள அரசியல்வாதிகளும் அதனைத் தான் செய்கின்றார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தை, தனது தேர்தல் வெற்றிக்காக பாவித்த பண்டாரநாயக்காவின் காலத்திலிருந்து, தேர்தல்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட அரசியலைத்தான் தமிழ் மக்களை ஓரம் கட்டுவதற்காக ஒன்று மாறி ஒன்றாக எல்லா கட்சிகளும் வளர்த்தன. அடுத்த சந்ததியைப் பற்றி அரசியல்வாதிகளுக்கு கவலையில்லை. மைத்திரிபால சிறிசேனவை உதாரணமாகப் பார்க்கலாம். நாட்டின் ஒற்றுமையை உருவாக்கி, ஒரு சந்ததிக்கு மேல், நாட்டை முன்னேற்றக் கூட இருந்த வாய்ப்புகளையெல்லாம், பதவிகளுக்காக போட்டு எறிந்து பின்னர், அரசியலில் தான் சிங்கள - பௌத்தத்தைப் பேணுவேன் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மீளமைப்பதில் மும்முரம் காட்டுகிறார்.

அந்தக்காலகட்டத்தில்இருந்தரணிலை ஆராயுங்கள். கூட்டமைப்புக்கு அவருடன் இருந்த நெருக்கத்தை கணக்கிடுங்



சிறிமாவோ

கள். புதிய அரசமைப்பைப் பற்றிப் பேசி, பேசிக் காலம் கழித்தார்களேயே ஒழிய, அரசமைப்புச் சட்டத்திலிருந்து 13 ஆவது சரத்தை இருவரும் சேர்ந்தே அமுல் படுத்தவில்லை.

இவற்றினால்தான் இவர்களில் பலர் உண்மையான தலைவர்களாவதில்லை. தலைவர்கள்தான் அடுத்த சந்ததிகளுக்காகவும் திட்டம் தீட்டுகின்றனர். இந்திய பிரஜாவுரிமை சட்டம் கொண்டு வரப்பட்ட போது, தந்தை செல்வா, இது தனது சந்ததிக்கும் நேர வாய்ப்புண்டு என்று சிந்தித்தார். அவர் தனது கொள்கைகளின் வழியில் தலைவரானார்.

அவரைத் தொடர்ந்து வந்தவர்களெல்லாம் தேர்தல் அரசியலுக்கான சுலோகங்களில் சேறாடியவர்களே ஒழிய, அடுத்த சந்ததிகளைச் சிந்தனையில் இருத்தவில்லை. நடந்த சம்பவங்களை ஆதாரங்களாக பாவித்து, இன்று வரைக்கும் முறைப்பாட்டுக்காரர்களாகவே காலத்தை ஓட்டுகின்றார்கள்.

விடுதலைக்கென்று தம்மை அர்ப்பணித்து, ஆயுதப் போராளியாக புறப்பட்டவர்கள், தேர்தல் என சிந்திக்காவிட்டாலும், தங்களது அனுபவக் குறைவுகளினாலும், ஒற்றுமையீனங்களாலும் அதிகாரப் போட்டிகளினாலும், அவர்களிடையே வளர்ந்த பெருச்சாளிகளாலும், தங்களது சந்ததியை அழித்தாலும், தேர்தல் பரப்பு வெளிக்கப்பால், தமிழ் மக்களின் அவல நிலையையும், அவர்களுக்கு எதி



(பண்டி) சொய்ஸா

ரான அட்டூழியங்களையும் சர்வதேசத்தின் மனிதாபிமானத்திற்கு சவாலாக விட்டு சென்றார்கள்.

அதனை முன்னெடுத்து செல்ல, தங்களைத் தலைவர்களாக, அறியப்படுத்திக் கொண்ட கூட்டமைப்பு, அதனை ஒட்டி தங்களிடையே இருந்த பிளவுகளை மேம்படுத்தி, தேர்தலில் குறிவைத்து, சம கால அரசியல்தான் நடத்தினார்கள். உண்மையில் தமிழர்களுக்குத் தேவையான எந்த சர்வதேச கட்டமைப்பையும் உருவாக்கவில்லை.

அப்படியான, கட்டமைப்பு தோன்றி அதுவோ, அல்லது இருப்பதொன்றோ அப்படியான பணியை முன்னெடுக்காது சர்வதேச மனித உரிமை மன்றின் முன் இனப்படுகொலை என நிறுவப்படுவதின் சாத்தியங்கள் மிகக் குறைவே.

ஆகவே முள்ளிவாய்க்காலுக்கு பின் தமிழ் மக்களிடையே தலைமைத்துவம் இருந்ததா எனப் பார்க்க வேண்டும்.

(வளரும்)



சந்திரிகா

# ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடித்தால் வீதியில் இறங்குவோம்!

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. எச்சரிக்கை



மக்கள் ஆணையின்றி ஆட்சி அதிகாரத்தில் இருக்க முயற்சித்தால், மக்களுக்காக வீதியில் இறங்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே முன்வைத்த யோசனை தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

யாருடைய தேவைக்காக இந்த யோசனை முன்வைக்கப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஜனாதிபதியும் இது சம்பந்தமாக சூசகம் வெளியிட்டிருந்தார். தனக்கு இரண்டு ஆண்டுகள் பணியாற்ற முடியாமல் போனது என ஜனாதிபதி கூறியிருந்தார். புதிதாக வேலை செய்ய ஆரம்பிக்கவாம்.

1970 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு 5 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க மக்கள் வாக்களித்தனர். அவர் மக்களின் ஆணையின்றி, 77 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்ததன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வரலாற்றில் வீழ்ச்சிக்கு உள்ளானது.

இதனை அறிந்தால், எவரும் இப்படியான கதைகளைக் கூற மாட்டார்கள். தமது ஆணையின்றி ஆட்சி செய்ய மக்கள் எவருக்கும் ஆட்சி அதிகாரத்தை வழங்கவில்லை. இதற்கு எதிராக செயற்பாடுகளை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் தயார்.

மக்கள் ஆட்சி செய்யுமாறு கோரவில்லை. நிவாரணங்களையே கோருகின்றனர். இது ஆட தெரியாதவன் மேடை கோணல் எனக் கூறியமை போன்ற விடயம்.

மக்கள் ஆணை வழங்கினால், அந்த காலப்பகுதியில் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். பொறுப்பை நிறைவேற்றாது விளக்கம் கூறிப் பயனில்லை. ஜனாதிபதி, பிரதமர் அரசாங்கத்தையும் நாட்டையும் பொறுப்பேற்கின்றனர்.

நாட்டில் எந்த பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றைத் தீர்த்து மக்களுக்கு பணியாற்றவே அவர்களுக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்படுகிறது. நாட்டையும் நாட்டு மக்களையும் பராமரிக்க வேண்டும். மக்களைப் பாதுகாக்க வேண்டும். இதனைச் செய்யமுடியாத போது விளக்கம் கூறத் தேவையில்லை.

அரசமைப்பு ஊடாகத் தமக்குப் பணிகளை செய்யவே மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்குகின்றனர். ஜனாதிபதிக்கு ஐந்தாண்டுகள், நாடாளுமன்றத்துக்கு ஐந்தாண்டுகள் இதுதான் நாட்டின் அரசமைப்பு.

அதனை விடுத்து பலவந்தமாக ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்க முயற்சிப்பார்கள் என்றால், 1977 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு நடந்ததைப் பாடமாகக் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## புத்தளம் - திருமலை வீதியில் விபத்தில் ஒருவர் பரிதாப சாவு

புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியின் நொச்சியாகம நகரில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் 45 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற போது, கலாஓயாவை நோக்கி பயணம் செய்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக நொச்சியாகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

எனினும், குறித்த மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணம் செய்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், மோட்டார் சைக்கிளை செலித்திச் சென்ற நபர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

விபத்துடன் தொடர்புடைய தனியார் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நொச்சியாகம பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு வவுனியாவில் அலுவலகம் அமைப்பு!



முற்போக்கு கலை இலக்கியச் செயற்பாடுகளின் முன்னோடியாக செயற்பட்டுவரும் தேசிய கலை இலக்கிய பேரவையின் அலுவலகம் வவுனியாவில் திறந்துவைக்கப்பட்டது.

பேரவையின் தலைவர் க.தணிகாசலம் தலைமையில் குடியிருப்பு வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் இந்த அலுவலகம் திறந்துவைக் கப்பட்டது.

நிகழ்வில் வரவேற்புரையை சு.டொன்பொஸ்கோ நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து பேரவையின் தலைவரால் அலுவலகம் உத்தியோகபூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வாழ்த்துரைகளும், கவிதை அரங்கும் இடம்பெற்றிருந்தது.

அலுவலகத்தில் இ.கா.சூடாமணி அரங்கு மற் றும் மாவை வரோதயன் நூலகம் என்பன அமைய பெற்றுள்ளன.

மேற்படி நிகழ்வில் சிரேஸ்ட பொதுவுடமைவாதி சி.கா.செந்தில்வேல், ஓய்வுநிலை விரிவுரையாளர் நா.பார்த்தீபன், தமிழ்மணி மேழிக்குமரன், நி.பிர தீபன், கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## அரச நிறுவன நிர்வாகியின் சம்பளம் 90 லட்சம் ரூபா!

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பிரித்தானிய பிரஜையான ரிச்சர்ட் நட்டலை நியமிக்கும் தீர்மானத்தை பலரும் விமர்சித்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்திலும் இந்த விடயத்தை ஜேவிபியின் உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியிருந்தார்.

நட்டால் இதற்கு முன்பு 11 ஆண்டுகளுக்கு முன்பு பஹ்ரைன் ஏர்வேஸ் நிறுவனத்தில் பணியாற்றினார்.

இந்தநிலையில் 14 மாதங்களுக்குப் பின்னர் அந்த நிறுவனம் மூடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானத்தை ஸ்ரீஊலங்கன் எயார்லைன்ஸ் எடுத்துள்ளது.

90 லட்சம் ரூபா (45ஆயிரம் அமரிக்க டொலர்) மாத சம்பளத்தில் இந்த பிரித்தானிய பொதுமகன், புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் எனச் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள பொது விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாஸ, இதே பதவியில் ஏற்கனவே பணியாற்றியவர் 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களை மாதச் சம்பளமாகப் பெற்றதாகக் கூறியுள்ளார்.

இந்தப் பதவிக்காகத் தகுதியான 20 இலங்கையர்கள் அழைக்கப்பட்டனர். ஆனால் எந்தவொரு நேர்காணலும் நடத்தாமல், வெளிநாட்டவரை இந்தப் பதவிக்கு நியமிக்க அரசாங்கம் முடிவு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

73 வயதான நட்டால், 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள நட்டல், ராயல் ஜோர்டானியன் ஏர்லைன்ஸ், கேத்தே பசுபிக் ஏர்வேஸ், பிலிப்பைன்ஸ் ஏர்லைன்ஸ், கென்யா ஏர்லைன்ஸ் மற்றும் போலார் ஏர் கார்கோ ஆகியவற்றில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்து மற்றும் பௌத்த கலாசாரப் பேரவையினால் 2 ஆம் மொழி சிங்களம் பயில விண்ணப்பங்கோரல்

இந்து பௌத்த கலாசார பேரவையால் இரண்டாம் மொழி சிங்களம் பயில்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என இந்து பௌத்த பேரவையின் பொதுச் செயலாளர் தேசமாணிய எம்டி .எஸ். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் வார இறுதி நாள்களில் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணி வரை இந்தக் கற்கை நெறி இடம்பெறும்.

இந்தப் பயிற்சி நெறி ஆறுமாதங்கள் 120 மணித்தியாலங்கள் இடம்பெறவுள்ள நிலையில் தரம் 9 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், அரச உத்தியோகத்தர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் பங்குபற்ற முடியும்.

யாழ்.மாவட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, உடுத்துறை மகா வித்தியாலயம், யாழ்.மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வித்தியானந்தா கல்லூரி, கல்யாண வேலர் அறநெறிப் பாடசாலை, விசுவமடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெறும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கார் போனியா கல்லூரி, மத்திய கல்லூரி, வினாசியோடை மகா வித்தியாலயம், தர்மபுரம் மகாவித்தியாலயம், முருகானந்தா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெறும்.

வவுனியா மாவட்டத்தில் நாத் தாண்டிக்குளம் பிரமண்டு மகாவித்தியாலயத்திலும் மன்னார் மாவட்டத்தில் வழமையாக இடம்பெறும் பாடசாலைகளிலும் இந்தக் கற்கைநெறி இடம்பெறும்.

மேலும், குறித்த சிங்கள மொழியை கற்க விரும்புவோர் பின்வரும் பாடசாலைகளில் தொடர்பு கொள்ள முடியும் என்பதோடு மேலதிக விவரங்களுக்கு 076 0282693 என்ற அலுவலக இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நுட்பியல் அவத்தை

**நுட்பியல் அவத்தைத் தொடரை தொடர்ந்து வாசித்து பல்வேறு நாடுகளிலிருந்தும் கருத்துக்களைத் தெரிவித்து ஊக்கப்படுத்தும் வாசகர்களுக்கு நன்றி. இந்தத் தொடர் வாசகரில் ஏற்படுத்தியிருக்கும் எதிர் பார்ப்புக்கள் அதன்வழியான விடுப்பார்வத்தூண்டுதல்கள் வியப்பளிக் கின்றன. இங்கு அவுஸ்ரேலியா நாட்டில் மெல்பேர்னில் வசிக்கும் கி. நல்லரெத்தினம் அவர்கள் எழுதிய கருத்து நுட்பியல் அவத்தை தொடரின் ஆழத்தையும் அகலத்தையும் சுட்டிநிற்பதால் அதனையும் இங்கு சுட்டிக்காட்டி இன்றைய தலைப்புக்குள் நுழையலாம்.**





ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் –
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

'இலகு தமிழில் –academic வாடை இன்றி – சாமானியனும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதியுள்ளீர்கள். கட்டுரையின் தலைப்பில் உள்ள 'அவத்தை' என்ற வார்த்தையே பல எதிர்பார்ப்புகளை என்னுள் விதைத்தது! நான் செயற்கை நுண்ணறிவு சார்ந்த துறையை சேர்ந்தவனல்லன் ஆனால் digital curiosity கொண்டவன். இதுவே என் கவனத்தை உங்கள் கட்டுரையின் பக்கம் ஈர்த்தது.' என்று இவர் தனது கருத்தை ஆரம்பித்து செயற்கை நுண்ணறிவு சார்ந்த பரந்த பார்வையை விபரித்திருந்தார்.

'செயற்கை நுண்ணறிவு என்பது இப்போது எல்லைகள் கடந்து கரையுடைத்து பாயும் நதி. இந் நுண்ணறிவு அதை படைத்தவனின் இலக்கை மட்டும் அடைவதோடு நின்றுவிடாமல் தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்டு புதிய எல்லைகளை வடிவமைத்து படைத்தவனையே வியப்பில் ஆழ்த்தும் நிலையை அடைந்து கொண்டு வருகின்றது. 'நான் அவனில்லை' என இந்த 'நுண்ணறிவாளிகள்' சொல்லிப் போகும் நாள்கள் அதிக தூரத்தில் இல்லை. இவைகளின் செயற்பாட்டை கண்டு வியந்து களிப்புறும் அந்த படைப்பாளியின் குதூகலத்தில் நியாயங்களும் சட்ட வரைமுறைகளும் இன்னும் பங்குகொள்ளவில்லை. 'அழையா விருந்தாளியாக நாம் ஏன் இருக்க வேண்டும்' என சட்ட வல்லுநர்கள் தம் ஞானத்தின் மேல் பீடமிட்டு அமர்ந்து தியான நிலையில் இருப்பதும் ஒரு காரணமே. ஆனால் இவர்கள் கண் விழிக்கும் முன் காலம் கடந்து விடும். ஏற்கனவே முகநூலில் பல முகமிழந்த மனிதர்களால் மேடையேற்றப்பட்ட பல அவதூறுகளை – விசேடமாகப் பெண்களுக்கெதிராக – முகநூல் ல்தாபனம் கண்மூடி மௌனம் காத்தது தெரிந்ததே. பல நாடுகள் காலம் கடந்து சட்டம் போட்டு இவர்களை அடக்கியது அண்மைய வரலாறு. ஆனால் கயிற்றில் தொங்கிய பல உயிர்களை காலனே வைத்துக் கொண்டான்!' என்று விவரித்து புதிய நுட்பியல் அவத்தையின் விந்தையையும் விவரித்திருந்தார்.

IoT, 5G போன்ற தொழில்நுட்ப திறன்களை சீனா போன்ற நாடுகள் அடிமைகளுக்கு மாட்டும் கால் சங்கிலிகளாக பாவிப்பது சோகமே. ரோபோடிக் செயல்முறை இன்று பல மருத்துவ மற்றும் இராணுவ பயன் பாட்டி




லும் தடம் பதித்து விட்டன. சத்திர சிகிச்சைகள் இனி வைத்திய நிபுணரின் கத்தியில் அல்ல joystick கொண்டே நிறைவடையும்! விசில் ஊதியதும் பதுங்கு குழிக்குள் இருந்து வெளியேறி கொத்துக் கொத்தாய் எதிரியின் குண்டடிபட்டு விழுந்து மாண்ட முதலாம் உலகப் போர் காலம் மலையேறிவிட்டது. எதிர்கால உலகப்போர்களின் வெற்றி 'கம்பியூட்டர் லாப்' களிலேயே நிர்ணயிக்கப்படும். இதில் அமெரிக்க இராணுவம் பல பில்லியன்களை முதலீடு செய்துள்ளதாய் செய்திகள் வந்து கொண்டே இருக்கிறதே! இந்த நிமிடத்தில் இராணுவ ஆராய்ச்சி மையங்களில் கண்டறியப்பட்ட பல புதிய கண்டுபிடிப்புகள் பல்கலைக்கழகங்களை எட்ட பல வருடங்கள் எடுக்கலாம். 'புதிய அறிவுகளின் தேடல் என்பது எதிர்காலத்தின் இயங்கு நிலைக்கு முக்கியமானது. அதை தேடி நாடி கற்பது அவசியமாகிறது என்பதால் தான் இந்த அறிவு பகிர்வுக்களம் உருவாக்கப்பட்டது. அதனை கி. நல்லரெத்தினம் அவர்களின் கருத்து உறுதிசெய்வது மகிழ்ச்சி.

'காலைக்கதிரில் வெளிவரும் உங்கள் கட்டுரைகள் வாசகர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை மட்டுமல்லாது ஒரு தேடலுக்கான தீப்பொறியையும் பற்றவைத்துச் செல்கின்றன. இனி, தீ பரவட்டும்! இதுவே ஒரு விரிவுரையாளரின் பணி என்பேன். வகுப்பறை கடந்த அறிவுத் தேடலை தமிழ் சமூகத்தில் விதைக்கும் உங்கள் பணி தொடரட்டும். களம் அமைத்த காலைக்கதிருக்கும் நன்றி.' என்று தனது அறிவில்சார்ந்த கருத்தை முன்வைத்திருந்தார்.

கி. நல்லரெத்தினம் அவரகள்; குறிப்பிட்டது போன்று IoT, 5G போன்ற தொழில்நுட்ப திறன்களை சீனா போன்ற நாடுகள் அடிமைகளுக்கு மாட்டும் கால் சங்கிலிகளாக பாவிப்பது சோகமே.' என்ற கருத்துக்கு வலுச்சேர்பதான ஒருவிடயமாக இன்டர்நெட் ஆஃப் பிஹேவியர் (IoB) என்ற நுட்பியல் அவத்தையும் அமைந்திருப்பதையும் இனங்காண முடியும். அதாவது,

இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoB) என்பது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பொருள்களின்/கருவிகளின் வலையமைப்பாகும், அவை இணையத்தில் தகவல் மற்றும் தரவைச் சேகரித்து பரிமாறிக்கொள்ளும். IoB தொடர்ந்து விரிவடைந்து, அதன் சிக்கலான நோக்கத்தில் உருவாகி வருகிறது, அதாவது சாதனங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட விதம், இந்த பொருள்களால் தன்னியக்கமாக செயலாக்கக்கூடிய கணக்கீடுகள் மற்றும் சேமிப்பகத்தில் சேமிக்கப்படும் தரவு மிகவும் சிக்கலான முறையில் உருவாகின்றன. தரவு சேகரிப்பு (BI, Big Data, CDPs) வாடிக்கையாளர் நடத்தைகள், ஆர்வங்கள் மற்றும் விருப்பத்தேர்வுகள் பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வழங்குகிறது, மேலும் இது இன்டர்நெட் ஆஃப் பிஹேவியர் (IoB) என குறிப்பிடப்படுகிறது. IoB பயனர்களின் ஆன்லைன் செயல்பாட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவை நடத்தை உளவியல் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள முயற்சிக்கிறது. இது தரவுகளை புரிந்து கொண்டு புதிய தயாரிப்புகளை உருவாக்க மற்றும் சந்தைப்படுத்த அந்த புரிதலை எவ்வாறு பயன்படுத்துவது என்ற கேள்விக்கு தீர்வு காண முயல்கிறது, இவை அனைத்தும் மனித உளவியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது அதற்கேற்ப்ப வணிகவிருத்திக்கான ஒன்றாகும். அதாவது IoB என்பது நடத்தை உளவியல் கண்ணோட்டத்தின் மூலம் பயனர், வாடிக்கையாளர்கள் தரவு பகுப்பாய்வு செய்யப்படும் செயல்முறையைக் குறிக்கிறது. அந்த பகுப்பாய்வின் முடிவுகளுடன், பயனர் அனுபவத்தை (CX), தேடல் அனுபவ உகப்பாக்கம் (SXO) வடிவமைப்பதற்கான புதிய அணுகுமுறைகள் மற்றும் நிறுவனங்கள் வழங்கும் இறுதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை எவ்வாறு சந்தைப்படுத்துவது என்பதை இது தெரிவிக்கிறது. இதன் விளைவாக, ஒரு நிறுவனம் IoB ஐ நடத்துவது தொழில்நுட்ப ரீதியாக எளிமையானது, ஆனால் உளவியல் ரீதியாக சிக்கலானது. இங்கு, சட்ட காரணங்களுக்களடிப்படையில் நோக்கும் போது நுகர்வோர் தனியுரிமை மீறப்படுகின்றது எனலாம்.

மேலும் IoB கூடுதலாக, முக அங்கீகாரம், இருப்பிட கண்காணிப்பு மற்றும் பிக் டேட்டா போன்ற தனிநபரை நேரடியாக கவனம் செலுத்தும் தற்போதைய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது. எனவே இது மூன்று துறைகளின் கலவையாகும். தொழில்நுட்பம், தரவு பகுப்பாய்வு மற்றும் நடத்தை உளவியல் போன்றவற்றின் ஒன்றிணைந்த ஒருவகையில் தனிநபர் உரிமையை மீறும் செயல்முறையாகப்பார்க்கப்படுகின்றது.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் மெசின் லேர்னிங் அல்காரிதம்களில் உள்ள மேம்பாடுகளைப் பயன்படுத்தி மக்களின் நடத்தைகளைக் கண்காணித்து விளக்குவதற்கு அனுமதிக்கும் தொழில்நுட்பமாகும். அனைத்து வகையான மனித நடத்தைகளையும் கைப்பற்றுவது, பகுப்பாய்வு செய்வது, புரிந்துகொள்வது மற்றும் பதிலளிப்பது ஆகும். மக்களின் நடத்தைகள் கண்காணிக்கப்பட்டு, விரும்பிய செயல்பாட்டு அளவுருக்களை நோக்கிச் செயல்பட அவர்களை தூண்டுதலாகும். IoB ஐப் பற்றி உண்மையில் பொருத்தமானது என்னவென்றால், அது நடத்தையை பகுப்பாய்வு செய்தல், மற்றும் ஒரு குறிப்பிட்ட விளைவைக் கொண்டுவருவதற்கு எந்த உளவியல் மாறிகள் செல்வாக்கு செலுத்த வேண்டும் என்பதைக் கண்டறிதல ஆகும். இது நுகர்வோர் தேர்வை பாதிக்கிறது, அதாவது அது மதிப்பு சங்கிலியை மறுவடிவமைப்பு செய்கிறது. சில பயனர்கள் தங்கள் தரவை வழங்குவதில் எச்சரிக்கையாக இருக்கும் போது, பல பயனர்கள் அது மதிப்பு சேர்க்கும் வரை மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் – தரவு உந்துதல் மதிப்பு. நிறுவனங்களைப் பொறுத்தவரை, இது அவர்களின் படத்தை மாற்றுவது, தயாரிப்புகளை தங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திறம்பட சந்தைப்படுத்துவது அல்லது ஒரு தயாரிப்பு அல்லது சேவையின் வாடிக்கையாளர் அனுபவத்தை (CX) மேம்படுத்துவது. அதாவது, விற்பனைப் பொருள்களின் செயல்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான இறுதி குறிக்கோளுடன், பயனரின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தகவல்களை சேகரிக்கும் ஒரு நுட்பியல் அவத்தையெனலாம்.

ஒரு நிறுவனம் அதன் சந்தைப்படுத்தல் துறையில் IoB ப் பயன்படுத்துவதற்கு, முதலாவதாக, பயனரின் தொடர்பு முறைகள் மற்றும் தொடு புள்ளிகளை கற்பனை செய்வது முக்கியம். ஒரு வணிக நிலையத்தில் ஒருவாடிக்கையாளரால் வழங்கப்படும் தொலைபேசி இலக்கம் மற்றும் ஈ.மெயில் தான் ஒரு வாடிக்கையாளரை வணிகநிறுவனம் பின்தொடர வாய்ப்பளிக்கிறது. இதன் மூலம் அவர்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளப்படுகிறது, பயன்பாட்டின் அனுபவம் ஒருங்கிணைக்கப்படுகிறது. இதற்காக, பிக் டேட்டா மூலம், பல தொடர்பு புள்ளிகளிலிருந்து தகவல்களை அணுகலாம். ஒரு தயாரிப்பில் வாடிக்கையாளரின் ஆர்வம் எங்கிருந்து தொடங்குகிறது, வாங்குவதற்கான அவர்களின் பயணம் எவ்வாறு இருக்கிறது மற்றும் வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும் முறை போன்றவற்றை அறிய, தொடக்கத்தில் இருந்து இறுதி வரை ஆராய்வதை இது சாத்தியமாக்குகிறது. இது நுகர்வோருடன் நேர்மறையாக ஈடுபட அதிக தொடு புள்ளிகளை உருவாக்கும் திறனை வழங்குகிறது.

கூகுள், ஃபேஸ்புக் அல்லது அமேசான் ஆகியவை பயனர்களின் அனுமதியின்றி, ஒரு பயன்பாட்டிலிருந்து அவர்களின் முழு மெய்நிகர் உலாவையும் கண்காணிக்கின்றன. இது வாடிக்கையாளர்களின் சட்ட மற்றும் பாதுகாப்பு அபாயங்களைச் சுட்டிநிற்கிறது.

அதாவது ஒரு மெய்நிகர் உலாவியின் நடத்தை தரவு, வங்கிக் குறியீடுகளை சேகரித்து விற்கும்; குற்றவாளிகள் இதனைப்பயன்படுத்த, அணுக அனுமதிக்கப்படுகிறது. இந்த சைபர் கிரைமினல்கள் தனிப்பட்ட பயனர்களின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றவாறு மேம்பட்ட மோசடிகளை உருவாகக முடியும். இதனால் பயனர்கள் மோசடி செய்யப்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கலாம். ஒருவரின் மொபைல் போனை லேப்டாப், வாய்ஸ் அசிஸ்டண்ட், ஸ்மார்ட் ஹோம் அல்லது ஒருவரின் வாகனத்துடன் இணைப்பது நிறுவனங்களுக்கு கடினம் அல்ல. கூகுள், ஃபேஸ்புக் அல்லது அமேசான் ஆகியவற்றிலிருந்து சந்தை ஆராய்ச்சி மேலும் மேலும் விரிவானதாகி வருகிறது. இந்த நிறுவனங்களின் அல்காரிதம்கள் வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் நடத்தைகளையும் சேகரிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

ஆகவே கி. நல்லரெத்தினம் அவர்கள் குறிப்பிட்டது போன்று இந்தத் தொழில்நுட்பங்கள் எல்லாமே அடிமை




களுக்கு மாட்டப்படும் கால்விலங்கு போன்றனவே என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும் அவற்றை விட்டு விலகி ஓடமுடியாது அவற்றைப் புரிந்து கையாளும் திறனுக்காக அவைபற்றி அறிதல் வேண்டும்.



# நாட்டின் கௌரவ தொழில் அரச தாதியர்கள் சேவை!

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது தகுதியானவர்கள் தவறவிடாதீர்!

- தெல்லியூர் சி.ஹரிகரன் -

தாதிய மாணவர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு 2020 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சின் தாதிய உத்தியோகத்தர் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்படி விண்ணப்பங்கள் 31-12-2021 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமாணி பத்திரிகை மூலமாகக் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி 31-01-2022. கற்கை நெறிக்கான கல்வித் தகைமைகள் க.பொ.த. (சாதாரணதரம்), சிங்களம் அல்லது தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 4 பாடங்களிலும் திறமைச் சித்தியுடன், இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி. க.பொ.த. (உயர்தரம்) 2018 ஆம் வருடத்தின் பழைய பாடத்திட்டம் அல்லது 2019 ஆம் வருடத்தின் பழைய அல்லது புதிய பாடத் திட்டத்தில் ஏதாவதொரு விஞ்ஞானப் பிரிவிற்குரிய பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல் அல்லது கணிதம் ஆகிய ஏதாவது மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருக்க வேண்டும். அல்லது 2018ஆம் வருடத்தின் பழைய பாடத்திட்டம் அல்லது 2019 ஆம் வருடத்துக்குரிய பழைய அல்லது புதிய பாட்டத்திட்டத்தில் ஏதாவதொரு பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பிரிவிற்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தில் வேண்டும்.

கற்கைநெறிக்கான வயதெல்லை 2022-01-31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். திருமணம் ஆகாதவராக இருக்கவேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் மாவட்டம், வதிவிட மாவட்டமாகக் கருதப்படுவதற்கு விண்ணப்பதாரர் விண்ணப்பமுடிவு திகதியான 2022-01-31 ஆம் திகதிக்கு கிட்டிய மூன்று வருடங்கள் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

ஏதாவதொரு பல்கலைக் கழகத்தில் அல்லது



தேசிய கல்வியியற்கல்லூரியில் சுகாதார அமைச்சின்பயிற்சிகளில்தம்மை இணைத்துக்கொள்பவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியாது.

**விண்ணப்பிக்கும் முறை:**

சுகாதார அமைச்சின் உத்தியோக முடிவு இணையத்தளத்தில் (www.helth.gov.lk ) மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பதாரர் 500 ரூபா பணத்தை இலங்கைவங்கி தப்ரபேன் 7041318 சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கணக்குக்குச் செலுத்தவேண்டும். இந்தப் பணத்தை இலங்கை வங்கியூடாக அல்லது இணையத்தள வழியின் ஊடாக அல்லது பண வைப்புச் செய்யப்படும் இயந்திரங்களின் ஊடாகவும் செலுத்தலாம். இணைய வழியினூடாக விண்ணப்பித்தாலும் விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி ஒன்றை எடுத்து உரிய முறையில் உங்கள் கையொப்பத்தை இட்டு; சமாதான நீதிவான், பாடசாலை அதிபர்கள், சட்டத்தரணிகள் போன்ற ஒப்பமிடும் அதிகாரமுடையவர்களிடம் உறுதிப்படுத்தி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படின் சமர்ப்பிக்கவேண்டும். மேலதிக பூரணமான விவரங்களை அறிந்து கொள்ள இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 31-12-2021 ஆம் திகதிய வர்த்தமாணி பத்திரிகையைப் பார்க்கவும்.

இந்தத் தாதிய உத்தியோகத்தர் நியமனம், அரச சேவையில் பணிபுரிய எண்ணுகின்ற இளைஞர், யுவதிகளுக்குப் பின்வரும் சாதகமான அனுகூலங்கள் காணப்படுகின்றமையால் ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் கிடைக்கும். பயிற்சி நிறைவில் சித்தியடையும் அனைவரும் உடன் நிரந்தர சேவையில் உள்வாங்கப்படுவர். பெரும்பாலும் பயிற்சி முடிந்தவுடனேயே பயிலுநர்களாகப் பணிபுரியும் வாய்ப்புக்களும் உள்ளன. அநேகமாக பயிற்சி ஆரம்பமாகும் காலம் முதல் உயிர்வாழும் காலம் வரை வேதனம் மற்றும் ஓய்வூதியம் கிடைக்கின்ற ஒரே தொழில் தாதிய சேவை ஆகும். பெரும்பாலும் நூற்றுக்கணக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றமையால் தகைமையுடையோர் தொழில்வாய்ப்பைப் பெறுவர்.

அநேகமாக வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் நிலைமை உருவாகும். இந்த நிலைமை தற்போதும் காணப்படுகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் விண்ணப்பிக்கத் தகுதியுடைய எத்தனையோ இளைஞர், யுவதிகள் தாதிய உத்தியோகம் தொடர்பில் பூரண அறிவின்மையால் - தெளிவின்மையால் - விண்ணப்பிக்கத் தவறுகின்றனர். இதனால் வடக்கு கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சிங்களத் தாதிய உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை சுகாதார அமைச்சுக்கு ஏற்படுகின்றது. இவ்வாறு பிறமொழியுடையவர்கள் தமிழ் ஆட்சிமொழியாக உள்ள வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகளுக்குத் தாதிய உத்தியோகத்தர் களாக நியமிக்கப்படுகின்றபோது நோயாளர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். தாதிய சேவையாளர்களுக்கும் நோயாளர்களுக் குமான நெருக்கமான தொடர்பாடல் பாதிக்கப்படுகின்றது.

ஆகவே, நாட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்ததாக கூடிய வேதனம் வழங்குகின்ற அமைச்சாக



சுகாதார அமைச்சுக் காணப்படுகின்றது. எமது தமிழ்ப் பிரதேசத்தில் கல்வித் தகைமையுடைய எத்தனையோ இளைஞர், யுவதிகள் அதி உயர் வேதனத்தைப் பெறும் தாதிய சேவைக்குத் தகுதியிருந்தும் விண்ணப்பிக்கத் தவறுகின்றமை வேதனையளிக்கின்றது. எமது பிரதேசத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த பலர் கடமையாற்றும் நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. மற்ற அரச சேவைகளைப் போன்றல்லாது, தாதிய துறையில் அவர்கள் வதியும் மாவட்டத்தில் அவர்களது வதிவிடத்துக்கு அருகிலுள்ள வைத்தியசாலையில் கடமையாற்றும் சந்தப்பம் வேறு எந்த அரச துறைக்கும் கிடையாது. அதனால், மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமையுடைய இளைஞர், யுவதிகள் முன்வந்து இந்தத் தாதிய சேவையைத் தெரிவு செய்து எமது சமுதாய வளர்ச்சிக்கும் சுகாதாரத் துறையின் மேம்பாட்டுக்கும் நோயாளர்களின் ஆரோக்கியத்துக்கும் என்று தங்களை முன்னிறுத்தவேண்டும்.

சுழற்சிமுறைக் கடமை 6 மணித்தியாலங்கள் தாதிய சேவையில் இருக்கின்றமையால் நாளாந்தத் தேவைகளுக்கு அமைவாகப் பணிபுரியும் அரிய சந்தர்ப்பம் உண்டு.

பயிற்சிகள் அவரவர் மாவட்டங்களிலேயே பெற்றுக்கொள்ளமுடியும். தரம் 3,2,1 மற்றும் விசேடம் காணப்படுகின்றமையால் பதவி உயர்வுகள், சம்பள உயர்வுக்கான பல்வேறு வாய்ப்புக்கள் ஏனைய துறைகளைவிடக் காணப்படுகின்றன.

வைத்தியசாலை அல்லது விடுதி முகாமைத்துவப் பயிற்சி நெறி உட்பட பலதுறைசார் விசேட பயிற்சி வாய்ப்புக்கள், வைத்தியர்களுக்குக் கிடைக்கின்றமைபோல் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் கிடைக்கின்றன. இந்நிலைமை வேறு அரச ஆளணியில் அரிதாகவே உள்ளது.

தாதியத் துறையின் உயர்மட்டக் கல்விகளுக்கு பிரகாசமான வாய்ப்புக்கள் தற்போது அதிகமாக உள்ளன. இளமாணி, முதுமாணி (2, 3 துறைகளில்), கலாநிதிப் பட்டம் ஆகிய உயர்கல்வி வசதிகள் இலங்கையிலேயே தற்போது பெற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் போன்ற அறிவு, ஆளுமை மிக்க கல்விகளைக் கற்றுவிட்டு, தமது அறிவுக்கு - கல்விக்கு - உரிய தொழில் இன்றி, எத்தனையோ இளைஞர், யுவதிகள் வேதனைப்படுகின்றனர். உளரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், கணித, விஞ்ஞானப் பிரிவில் உயர்தரத்தில் கற்றவர்கள் 3 பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருந்தாலே, இந்தத் தாதியத் துறை அவர்களை இளமாணி, முதுமாணி, கலாநிதி வரை கொண்டுசென்று அவர்களை சமூகத்தின் உயர் கல்வியியலாளர்களாக உயர்த்துகின்றது என்பதைப் பலரும் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்.

இளைஞர் அல்லது யுவதிகளின் உயர்கல்விப் பட்டம் பெறல் என்ற கனவு நனவாகுகின்றது. பல நிலைகளில் முகாமைத்துவம் செய்கின்றமைக்குக் கல்வி கற்கின்ற உயர்நிலைகளையும் அடையலாம்.

பணி புரிகின்ற காலத்தில் மாதாந்த வேதனத்துடன் மேலதிக நேரக் கொடுப்பனவு போன்ற உயரிய சலுகைகள் கிடைக்கும் நிலை தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கும்.

அத்துடன் தனது, குடும்ப, உறவினர்களின் மருத்துவ சேவைகள், மருத்துவ ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குவதன் ஊடாக மற்றவர்களுக்கு உதவுகின்ற அரிய வாய்ப்புக் கிடைக்கும்.

தன்னலமற்ற சேவையின் மறுவடிவமான தாதிய சேவைக்கு எல்லாவற்றுக்கும் மேலான அரச வேதனத்துடன் கூடவே மனிதர்களுக்கு சேவை செய்கின்ற - மனித உயிர் காப்புக்கு உதவுகின்ற - எத்தனையோ நல்லவர்களின் - ஆசியை, வாழ்த்தைப் பெறுகின்ற - திருப்தி மகிழ்வளிப்பதுடன் அவர்களின் நேர்த்தியான சேவை அவர்கள் குடும்பத்துக்கும் நல்வாழ்வளிக்கும் என்பது வெள்ளிடைமலை.

காலைக்கதிர் Kalaikkathir

# நான்கு மணிநேர மின்வெட்டு உறுதி

## வெளியானது இறுதி அறிவிப்பு

**நாட்டில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 4 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.**

**நேற்று காலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் இதனைத் அறிவித்துள்ளார்.**



இன்று முதல் ஒரு மணி நேரம் மின்வெட்டு இருந்தாலும், அதனை மேலும் இரண்டு மணிநேரமாக நீட்டிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அடுத்த வெள்ளிக்கிழமை வரை மட்டுமே இந்தச் செயன்முறையைத் தொடர முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் இலங்கை மின்சார சபை நிச்சயமாக 4 மணித்தியால மின்வெட்டை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது வறட்சியற்ற கால நிலை நிலவுகின்ற போதிலும் நீர்மின் நிலையங்கள் முழுக் கொள்ளளவுடன் இயங்கி வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் எதிர்காலத்தில் குடிநீர் மற்றும் விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசுக்கு எதிராகக் கொழும்பில் இன்று ஆசிரியர் சமூகம் மாபெரும் போராட்டம்

மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்க ளுக்கு நீண்டகாலமாக நியமனம் வழங்கப்படாதுள்ளமையைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.




மத்திய மாகாண ஆளுநரின் தன்னிச்சை யான தீர்மானங்கள் காரணமாகவே குறித்த நியமனம் இதுவரை வழங்கப்படாதுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் மத்திய மாகாண ஆசிரியர் உதவியாளர்களுக்கான நியமனம் வழங்கப்படவிருந்த நிலையில், அது மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருந்தது.

பயிற்சியினை நிறைவு செய்த ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனத்தை உடனடியாக வழங்குவது தொடர்பில் நிதியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே முன்னதாக தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 300க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்ற போதிலும், இந்த ஆசிரியர் உதவியாளர்களுக்கான நியமனங்கள் இதுவரை வழங்கப்படாதுள்ளன.

இந்நிலையில், அரசால் உடனடியாக அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

### முக்கிய வழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு - புதுக்கடை உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் கொவிட் தொற்று பரவல் நிலையை அவதானிக்க முடிவதாக நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 20 ஆம் திகதி, உயர் நீதிமன்றில் யுகதனவி அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு வந்த போது, அவ்வழக்கை விசாரிக்கும் ஐந்து பேர் கொண்ட பூரண நீதியரசர்கள் குழாமின் தலைமை வகிக்கும் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய பிரசன்னமாகவில்லை. இதனையடுத்து வழக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில், யுகதனவி மனுக்களை விசாரித்த நீதியரசர்கள் குழாமுக்கும், அவ்வழக்குடன் தொடர்புபட்ட நீதிமன்ற சேவகர்கள் சிலருக்கும் கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக உயர் நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இந்த நிலைமையானது நீதிமன்ற வழக்கு விசாரணைகளை பாதிக்கும் சூழலை உருவாக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேற்படி விடயத்தை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அளுவிஹார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரி.பி. தெஹிதெனிய ஆகியோர் அடங்கிய ஐவர் கொண்ட பூரண நீதியரசர்கள் அமர்வொன்றின் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக வழிபடப்பட்டு வந்தது.

வவுனியா நகரின் இலுப்பையடிப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள், ஓட்டோச் சாரதிகள், அப்பகுதியால் பயணத்தில் ஈடுபடும் மக்கள் என பலராலும் வழிபடப்பட்டு வந்த பிள்ளையார் சிலையே மாயமாகியுள்ளது.



இனந்தெரியாத நபர்கள் சிலையை அங்கிருந்து அகற்றியுள்ளனர். சிலை இருந்த இடம் வெறுமையாக காட்சியளிக்கின்றது.

# நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிக்கும் எண்ணம் அரசிடம் இல்லை

## அமைச்சர் நாமல் திட்டவட்டம்

நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும், நாடாளுமன்றத்தின் பதவி காலத்தையும் இரு வருடங்களுக்கு நீடிக்கப்பட வேண்டும். அதற்கான யோசனை முன்வைக்கப்படும் என்று டயானா கமகே எம்.பி. சபையில் வெளிவிடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

தேர்தல்கள் உரிய காலப்பகுதியில் நடத்தப்படும். அவ்வாறு நடத்தித்தான் ராஜபக்ஷக்களுக்குப் பழக்கம். எனவே, நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் நீடிக்கப்படமாட்டாது. அதற்கான தேவையும் எழவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம் – என்றார்.

# இறக்கக்கண்டி பாலம் அருகில் நீரில் மூழ்கி சிறுமி உயிரிழப்பு

## மற்றொரு சிறுமி ஆபத்தான கட்டத்தில்

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பாலத்துக்கு அருகில் நீரில் மூழ்கி சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

அன்றைய தினம் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை எழுதிவிட்டு வகுப்பாசிரியருடன் 8 மாணவர்கள் கடலில் நீராட சென்றுள்ளனர். அதில் இருவர் நீரில் மூழ்கியுள்ளனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் மீட்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்

இவ்வாறு உயிரிழந்த சிறுமி திருகோணமலை ஆண்டாங்குளம் பாசல்மாவத்தையை சேர்ந்த ஒய்னீ ஹன்சலா (வயது 10) எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் ஒரு சிறுமி அயோத்தியா (வயது 10) என்பவர் திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### புதிய லங்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளன.

அண்மையில், ரொரிங்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் இல்லத்தில் முக்கிய கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குமார வெல்கம, சுசில் பிரேமஜயந்த, அர்ஜுன ரணதுங்க, அநுரபிரியதர்சன யாப்பா உள்ளிட்ட மேலும் பலர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, கட்சியின் தலைமைக் காரியாலயம் எதிர்வரும் மார்ச் ஐந்தாம் திகதி பத்தரமுல்லையில் திறக்கப்படுகின்ற நிலையில் அதற்கு அடுத்தபடியாக கட்சியின் பொறுப்புக்களை யாரிடம் ஒப்படைப்பது என்பது பற்றி அக்கட்சியின் போஷகராக வகிபாகம் கொள்ளவுள்ள சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, அர்ஜுன ரணதுங்கவிற்கு பொருளாளர் அல்லது தேசிய அமைப்பாளர் பதவியை வழங்குமாறும், பொதுச்செயலாளர் பதவியில் சுசிலை அமர்த்துமாறும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும், அவர்கள் இருவரும் உடனடியாக அப்பதவிகளைப் பெற்றுக்கொள்வதாக இணக்கம் வெளியிட்டிருக்கவில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக அறியப்படுகின்றது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 300 அமைப்பாளர்கள் வரையில் குமார வெல்கமவுடன் இணைவதற்கு எதிர்பார்த்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் அடுத்த கட்டமாக நியமனக் கடிதங்கள் தலைமைக் காரியாலய திறப்பு விழா அன்று வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், தமது கட்சியின் அமைப்பாளர்கள் யாரும் குமார வெல்கமவின் கட்சியில் இணைய முயற்சிகளை கொண்டிருக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

இதேநேரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் ரணதுங்க உள்ளிட்டவர்கள் வெல்கம தலைமையிலான அரசியல் அணியில் திட்டமிட்டுள்ளனர் என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேசத் தலையீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் புரையோடிப்போயிருக்கும் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதைத் தவிர்த்து ஏனைய அனைத்து விடயங்களையும் கையாள முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகற்கனவு கண்டுகொண்டிருக்கின்றார் என்றும் அவர் பகிரங்கமாகச் சாடியுள்ளார்

மேலும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையினால்தான் போர் இடம்பெற்றது என்பதை ஜனாதிபதி மறந்து விடக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் போரின் காரணமாகவும் அக்காலத்தில் ஆயுதக் கொள்வனவுகளில் நடைபெற்ற ஊழல், மோசடிகள் காரணமாகவுமே நாடு மீள முடியாத பொருளாதார வீழ்ச்சிக்குள் சென்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் தீ விபத்து பகுதியை பார்வையிட்டார் சிறீதரன் எம்.பி.!





கிளிநொச்சி, ஜன. 24

கிளிநொச்சி வைத்தியசாலையில் தீ விபத்து ஏற்பட்ட பகுதியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பார்வையிட்டுள்ளார்.

சனிக்கிழமை மதியம் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தீ விபத்து ஏற்பட்டதும் தீயை அணைப்பதில் கரைச்சி பிரதேச சபை செயற்பட்ட விதம் தொடர்பில் வைத்தியசாலையினர் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்தினர்.

ஆளணி இல்லாத போதிலும் சிறப்பாகச் செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்த கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் உள்ளிட்ட உத்தியோகத்தர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள், வட்டார அமைப்பாளர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 16 ஆவது நினைவு நிகழ்வு

2006 ஆம் ஆண்டு திருமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ். சுகிர்தராஜனின் 16 ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றிலில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நடைபெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இந்த ஞாபகார்த்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த ஞாபகார்த்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், நண்பர்கள், ஊடக ஆர்வலர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள்,



உள்ளிட்ட பலதரப்பட்டோரையும் இதில் கலந்து கொள்ளுமாறு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு மேலும் 1.5 பில்லியன் அமெ. டொலர்?

## ஜி.எல். பீரிஸ் நம்பிக்கை



அரசாங்கம் அண்மையில் பெற்ற கடன்கள் மற்றும் உதவிப் பொதிகளுக்கு மேலதிகமாக மேலும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவிடமிருந்து பெறக் கூடும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடியதன் பின்னர் இலங்கைக்கு பாரிய உதவிப் பொதி கிடைத்துள்ளது.

இதற்கு மாற்றாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவையும் அரசாங்கம் பெற முடியும்.

தேவைப்படும் நேரத்தில், நேச நாடுகள் இலங்கைக்கு உதவி செய்வதால் நாடு தனிமைப்படுத்தப்படவில்லை அல்லது திவால்நிலையின் விளிம்பில் இல்லை.

அரசாங்கம் பொது வாக்கெடுப்பு நடத்துவதில் கவனம் செலுத்தவில்லை மாறாக அடுத்த மூன்று வருடங்களில் தனது வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.


74 ஆவது பிறந்த நாளும் 23 ஆவது ஆண்டு நினைவு நாளும்

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவரும், சமாதான நீதவானும், திருமுருகன் கலைஞ்சிய உரிமையாளரும், முன்னாள் வடபிராந்திய பிரிவின் சங்கத் தலைவருமாகிய

உயர்திரு. பொன்னுத்துரை மதிமுகராஜா



கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை
கடவுளே (அப்பா) கிடைத்தார் வரமாக
நான் பிறந்த போது என் பெயரின் பின்னால்
வரும் முதல் எழுத்து நீங்கள் தான் என்று
என் வாழ்க்கையை அழகாக மாற்றிக் கொடுத்து
எங்கள் பின்னால் நிற்பதும் நீங்கள் மட்டும் தான்
அப்பா என்றும் எங்கள் தெய்வம்
"தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே!
காலை கண் விழிக்கும் நொடிகள் எல்லாம்
உங்கள் ஞாபகங்கள் அப்பா!
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
ஆழியச் சுவடாய் பொதிந்துள்ளன!
நீங்கள் இல்லாத வாழ்க்கை நரகமாய்
உள்ளது அப்பா!
உங்களைப் பிரிந்து 23 ஆண்டுகள் ஆனாலும்
அன்றுமுதல் இன்றுவரை உங்கள் அன்பிற்கு
இணை யாருமில்லை அப்பா!
உங்கள் பாசத்திற்கு ஏங்கும் எங்கள் ஏக்கங்கள்
உணர முடியாத வலியாய் எங்களைக் கொல்கின்றது
அப்பா!

இன்றோ உங்கள் பிறந்த நாள் ஆனால்
எங்கள் மனம் நினைவஞ்சலி செலுத்த மறுக்கின்றது
அப்பா!
ஆகாயத்தின் எல்லை என்று கூறினால்
அது உங்கள் உருவம் தான் அப்பா!
நீங்கள் வேண்டும் உங்களுடன் வாழ்ந்த அந்த
பொக்கிஷமான நாட்கள் வேண்டும் அப்பா!
சின்ன வயதில் இறக்கக் கூடாத சொத்து நீங்கள் அப்பா!
அப்பா நீங்கள் எங்கள் அருகில் இருக்கையில் இறைவன்
கூட தேவையில்லை



பொன் மதிமுகராஜா விஜயலக்ஸ்மி (மனைவி),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பொன் மதிமுகராஜா விஜயகாந்த் (தலைவர் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை சமூக சேவை அமைப்பாளர். யாழ்ப்பாணம், இலங்கை)
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.

அனைத்துலக சமூகசேவைகள் நற்பணி, பொதுப்பணிச் செயலகம்,
கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி, யாழ்ப்பாணம், இலங்கை.

மண்ணில் 24.01.1948
விண்ணில் 26.12.1998


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2022இல் வெளியிடப்பெற்றது.